திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அவைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றனவா அல்லது அரசாங்கமே நேரடியாகப் பதிவு செய்கின்றதா? அதற்காக யார் யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? அப்பிசியல்ஸ் அதிலே யாராவது கலந்து கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் பதிவு செய்கிறார்கள். மின்வாரியப் பொறியாளர் ஒருவரை அதற்கு நிர்வாக இயக்குனராகப் போட்டு இருக்கிறோம். அதற்கென ஒரு குழு (போர்டு) அமைக்கப்பட்டுள்ளது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள், போன்ற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அதிகாரப்பற்றற்றவர்கள் யாரும் இல்லை.

தமிழ்நாட்டிலுள்ள பால் வழங்கும் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண். 43 —திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(ஆ) பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(இ) இரண்டையும் ஒன்றாக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இரண்டின் மொத்த பால் உற்பத்தி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) 30–6-82 வரை தமிழ்நாட்டில் உள்ள பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,935.

(ஆ) 30-6–82-ல் தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,952.

(இ) இல்லை. பால் வழங்கும் சங்கங்கள் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

(ஈ) இரண்டின் தினசரி சராசரி பால் உற்பத்தி 1982 ஜூன் மாதத்தில் நாளொன்றுக்கு 7,31,067 லிட்டர் ஆகும்.